செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. கெளளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 356

புத்-அo] யாழ்ப்பாணம்:- கீலக ளுல வைகாசிமீ ௪ உ வெள்ளிக்கிழமை (17-5-1968) [இல-௬

திருஞானசம்பந்தசுவாமிகள்காலத்தில்

## ஆகமங்கள் இல்லை என்பது பெரும் பிழை

— பண்டிதை த. வேதநாயகி —

சிவபெருமான் ஆகமங்களை அருளினரென்பதும் சிவாகமங்கள் பெரிதும் அறியப்படுகின்றனவென்பதும் சம்பந்தர் தேவாரத்திலே பாடப்படுகின்றன.

"தோகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழிற கூகம் மேவினன்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடந் திருவிற் கோலமே."

"நீறசிரு மேனிமிசை யாடிநிறை வார்கழல்சி லம்பொலிசெய
ஏலவிளையாடவிசை கொண்டிடுப லிக்குவரும் ஈசனிடமாம
ஆறசம யங்களுவி ரும்பியடி பேணியரன் ஆகமம் மிகக்
கூறுமனம் வேறிரதி வந்தடியர் கம்பம்வரு கோகரணமே".

சிவபெருமான் உமையம்மையாருக்கு ஆகமம் சொல்லுதலைத் திருநாவுக்கரசர் பாடுகிறார்.

'துணையி லாமையில் தூங்கிருட் பேய்களோ
டணைய லாவதே மக்கரி தேயெனு
இணையி லாவிடை மாமரு திலலெழு
பணையி லாகமஞ் சோலலுந்தன் பாங்கிக்கே'.

சம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒரு காலத்திருந்தார்கள் என்றும், கூடியிருந்தார்கள் என்றும் நிச்சயிக்கிறார்கள். இவ்வாறாக, சம்பந்தர் காலத்திலே ஆகமம் இல்லை என்று ஆகமப் பிரமாணத்தை அழிக்கத் துணிவது (சைவர்களுக்கு) முறையாகுமா!

ஆகமத்தை உணர்த்தும் வேறு பெயர்களை இருவர் தேவாரத்திலும் காணப்படுதலும் சிந்திக்கற்பாலன.

அறிவு தீண்டின மாத்திரத்தே உள்ளந்தானே அழுந்தக் கண்ணீர்தருகின்ற தேவாரச் செந்தமிழை இவ்வாறு ஆராய்ந்து கிறபது அன்பன்றே!

---

### சிவதீக்ஷை

திருவருளை முன்னிட்டு 22-5-68 புதன்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை மண்டபத்தில் மு.ப 9 மணியளவில் சிவஸ்ரீ. தத்புருஷதேசிகர் அவர்கள் அடியார்களுக்குச் சிவதீக்ஷை செய்து வைப்பார்கள். தீக்ஷையைபெற விரும்புகின்றவர்கள் எம்மிடம் தேவையான விபரங்களை யறிந்து கொள்ளலாம்.

சைவபரிபாலன சபை, மு. மயில்வாகனம்.
யாழ்ப்பாணம், 13-5-68. சமயப்பிரசார அமைச்சர்.

---

### மகா சங்காபிஷேகம்

கொக்குவில் மஞ்சவனைப்பதி ஸ்ரீ முருகன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தித் தினமாய இன்று (17-5-68) பகல் 12 மணியளவில் சஹஸ்ரமகாசங்காபிஷேகம் நடைபெறும். பிற்பகல் 3-30 மணி முதல் 4-30 மணி வரை இரட்டையர் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் 4-30 மணி முதல் 6-00 மணி வரை ஸ்ரீத குமாரசுவாமி புலவர் அவர்களது 'சண்டேசுவர நாயனார்' சரித்ர உபந்நியாசம் நடைபெறும். இரவு விசேஷ மேளக்கச்சேரிகளுடன் சுவாமி பூந்தண்டிகையில் திருவீதிவலம் வருவர்.

---

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பார்த்திருந்தடியனேனுன்
பரவுவன் பாடியாடி
மூர்த்தியேயென்ப னுன்னை
மூவரின் முதல்வனென்பன்
ஏத்துவாரிடர்கடீர்ப்பாய்
தில்லைச் சிற்றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான்
கூடநான் வந்தவாறே
திருச்சிற்றம்பலம்

-திருநாவுக்கரசு சுவாமிகள்,

---

### நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

—()—

---

சிவஸ்ரீ
தத்புருஷ தேசிகருக்குப்

### பாராட்டு

கரவெட்டி வெல்லன் பிள்ளையார் கோவிலில் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் 3-5-68 தொடக்கம் 13-5-68 வரை சிறந்த சமயச் சொற்பொழிவுகளாற்றினார்கள். அவருடைய சொற்பொழிவுகளைப் பெருந் தொகையான அடியார்கள் கேட்டு நற்பயனடைந்தனர். வேதசிவாகமம் திருமுறைகள் நீதிநூல் சாத்திரங்கள் புராணேதிகாசங்கள் முதலிய நூல்களின் கருத்துக்களைச் சந்தர்ப்பத்துக் கமைய எடுத்துக் காட்டி மக்கள் உள்ளங்களில் கடவுள் பக்தியையும் சமய அறிவையும் மிளிரச் செய்தனர். அவருடைய உள்ளமெனும் திருமலையில் ஊற்றெடுத்த பெருகிய அமுத வெள்ளத்தில் யாவரும் தேங்கித் திளைத்தார்கள். தேசிகர் அவர்கள் "காரைக்காலம்மையார்" என்னும் பொருள் பற்றி 13-5-68 இரவு 9 மணியளவில் நிகழ்த்திய பிரசங்க முடிவில் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைப் பாராளுமன்ற உபசபாநாயகருமாகிய திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் தேசிகருடைய சமயத் தொண்டினைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி அவரைக் கௌரவித்தனர். அவரைப் போன்ற சமய அறிஞர்களுடைய அறிவுரை நமது சைவ சமய அபிவிருத்திக்கு மிகவும் தேவையென்னவும் அத்தகையவர்கள் சமயப் பணி புரிதற்கு நமது நாட்டுக்கு விஜயஞ் செய்தற்குரிய வினாவொழுங்குகள் அநுகூலமாகும் வண்ணம் விநாயகப் பெருமான் அநுக்கிரகம் புரிவாரெனவும் அவர் குறிப்பிட்டனர். வித்துவான் நடராசா M. A. அவர்கள் நன்றியுரை கூறினார்கள்.

—

---

நேயர்கள் நெஞ்சம்

## மாணவ சமுதாயமும் ஒழுக்கக் கேடும்

———0———

தற்காலம் இவ்விஷயத்தைப் பற்றி எங்கும் ஓரே சத்தமாக ஓலமிடுகிறார்கள். பொதுவாகக் கல்வி சம்பந்தமான கூட்டங்கள், விழாக்கள், விளையாட்டு மைதானங்களில் உரையாற்றுபவர்கள் மாணவர் மாட்டு ஒழுக்கக் குறைவைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறார்கள் இந்நிலைமைக்குக் காரணம் கூறும் போது சமயக்கல்வி போதிய திருப்தி கரமான முறையில் ஊட்டப்படவில்லை எனபர் சிலர்; ஆபாச வெளியீடுகள் இலகுவாயும் மலிவாயுங் கிடைப்பதினால் அவைகளை வாசிப்பதும் முக்கிய காரணம் என்பர் சிலர்; கூட்டுக் கல்விமுறை காதலுணர்ச்சியைத் தூண்டுவதற்குக் காலாகி இருசாராரும் படக்காட்சியை நாடி அங்கே அவ்வுணர்ச்சி முதிர்ச்சி அடைவதினால் ஒழுக்கத்துக்குப் பங்கம் மேற்படுகிறதாகச் சொல்வர் சிலர்; ஆசிரியர்கள் மாணவர்களோடு நடந்து கொள்ளும் முறையில் குற்றங் காணுகின்றனர் சிலர் இவ்விதமான அபிப்பிராயங்களில் ஓரளவிற்கு உண்மை உண்டு. ஆனால் நமமுடைய அறிவையும் அநுபவத்தையும் கொண்டு ஆராயுங்கால் மாணவ மாணவிகளுடைய ஒழுக்கம் பண்பு, ஆசாரம் எனபன யாவையென அறிந்து கொள்ள இடமில்லாமல் இருப்பதே முக்கிய அடிப்படைக் காரணமாகத்தோன்றுகிறது.

மாணவ மாணவிகள் ஒழுக்கமென்பது என்ன என்று எங்கே, எவ்விதம் யாரிடம் அறிய இயலும்? உத்தியோகம் பார்க்கும் ஆண்களும் பெண்களும் தங்கள் குழந்தைகளை வேலைக்காரர், இனத்தவர்கள் அயலவர்களிடம் காலையில் ஒப்புவித்து விட்டுத் தங்கள் அலுவலகங்களுக்குச் சென்று மாலையில் வந்து அவர்களை ஏற்கின்றார்கள். இவ்வித நிலையிலுள்ள பிள்ளைகளுக்கு ஆசாரத்தை யார் பயிற்றுவார்கள்? சில பெற்றோர் வீட்டிலே குழந்தை பெருங்குழப்படியாக இருக்கிறதென்று பள்ளிக்கூடத்திற்குக் கலைத்துவிட்டுத் தொல்லையைக் குறைக்கப் பார்க்கின்றார்கள் தங்கள் குழந்தைகளுக்கு நான்கு வயதானும் நிரம்பமுன் வித்தியாசாலைக்கு முற்றுகை யிடுகிறார்கள். வித்தியாசாலையிலே ஆசாரம் ஒழுக்கம் நேர்மை முதலிய நற்குணங்களைப் பெறக் கூடியதாய் எவ்விதமாகக் கல்வி புகட்டப்படுகின்றது என்பதைப் பார்ப்போம்.

தற்காலம் வித்தியாசாலைகளில் பாவிப்பிலிருக்கும் முதற் புத்தகத்தில்

பனிநீர் தெளிக்கும் யானை
சந்தனம் கொடுக்கும் பூனை
கட்டிக் கரும்புப் பூனை
மாலைகள் பாயை வரிக்கும்

என்ற வாக்கியங்கள் அச்சிடப் பட்டிருக்கிறதைக் கண்டேன். இவ்வாறான வாக்கியங்களைக் கற்றதனால் ஒழுக்கம் இன்னதென்று ஒரு குழந்தை புரிந்து கொள்ள முடியுமா? அல்லாமலும் இவ்விதமான பண்புள்ள ஆனை, பூனை, மான எந்தக் காட்டிலே அல்லது வீட்டிலே காணப்படுமென்று ஆசிரியர் விளக்கிப் புகட்ட முடியும்?

தொடர்ச்சி 3-ம் பக்கம்

---

## ஞான சம்பந்தர் விழா

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

---

## திருமுறைக் கழக ஆண்டு விழா

வட்டு கிழக்கு திருமுறைக் கழக ஆண்டுவிழா சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோவில் தெற்கு நூல்வீதியில் 18-5-68 சனிக்கிழமை பிற்பகல் 5-30 மணியளவில் சாவகச்சேரி இந்துமகளிர் உயர்நிலைப் பள்ளி அதிபர் இராசலட்சுமி வைத்தியலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும். முன்னாள் உதவி வித்தியாதிபதி சிவ. க. சோமசேகரம் அவர்கள் விழாமலரினை வெளியிட்டு வைப்பார்கள். அறிஞர்பலர் அரிய சொற்பொழிவாற்றுவார்கள், கிள்ளைப் பாட்டு இன்னிசை விருந்து என்பனவும் இடம்பெறும்.

---

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

# இந்து சாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

கீலக ௵ வைகாசி மீ ௪-உ வெள்ளிக்கிழமை [1968]


## யாழ்ப்பாணக்குடாநாட்டு மக்கள்பீதி

யாழ்ப்பாணக் குடா நாட்டில் சுண்டிக்குளந் தொடக்கம் கோவளம்வரையிலுள்ள பகுதிகளில் கடற் கரையிலிருந்து ஐந்து மைல் தூரத்துக்குள் வசிக்கும் மக்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கே பொருட்களை வைத்திருக்கலாமென நிதி மந்திரியவர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஒரு பிரகடனம் வெளியிட்டிருக்கின்றார் இந்தப் பிரகடனத்தின்வண்ணம் ஆயுதப்படையினரும் பொலிஸாரும் எவருடைய வீட்டையும் எந்த நேரத்திலும் சோதனை செய்ய உத்தரவளிக்கப்பட்டிருக்கின்றது இந்த உத்தரவினல் யாழ்ப்பாணக்குடாநாட்டில் வசிக்கும் மக்கள் சொல்லொணுத துன்பத்துக்கு ஆளாவார்கள். இந்தப் பிரகடனத்தை தமிழ்ப பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபித்திருக்கின்ருர்கள். குறித்த பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் பன்னெடுங்காலம் அமைதியாக வாழ்ந்து வருகின்ருர்கள். அரசாங்கம் நிறைவேற்றியுள்ள இப் பிரகடனம் அவர்களுக்கு நித்திய கலக்கத்தையும் பீதியையும் விளைவிக்கும்.

வட பகுதி மக்களுக்குக் குறிப்பிட்ட பாவனைப் பொருட்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடு அங்கு வாழும் தமிழ மக்களை கள்ளக் கடத்தல்காரரென மதிப்பதுபோலுள்ளதெனவும் அவர்களுக்கு வழங்கப்படும் பொருள்களின் அளவைக் கூட்டவேண்டுமெனவும் பிரதம மந்திரிக்குத் தெரிவிக்கப்பட்டன. அவர் அவ் ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டு இச் சட்டத்தை இலங்கை முழுவதும் பிரகடனப்படுத்துவதாகத் தீர்மானஞ் செய்து அதுவரை குறித்த பிரகடனம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட மாட்டாதெனக் கூறியுள்ளாரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களை நிம்மதியாகவும் இன்பமாகவும் வாழச் செய்வதே அரசாங்கத்தின் கடமையாகும். அவர்கள் வருந்தக்கூடிய முறைகளை அரசாங்கம் கையாளுவது தருமமாகாது.

மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னுறறன் பரிசனத்தா
லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந் தீர்த் தறங்காப்பா னல்லனே.

ஒரு நாட்டை ஆளுகின்ற அரசன் தன் நாட்டில் வாழுகின்ற மக்களுக்கு வருகின்ற துன்பத்தைத் துடைத்து அறத்தைக் காக்கக் கடமைப்பட்டிருக்கின்ருன். மக்களுக்குத் துன்பம் அரசனுலும், அரசனுடைய பரிசனத்தாராலும், பகைவர்களாலும், கள்வர்களாலும், பிற உயிர்களாலும் நிகழக்கூடும். இந்த ஐந்து வகைகளினுலும நேருகின்ற துன்பங்களைவிலக்க வேண்டியது அரசனுடைய கடமையென ஆன்ரோர் கூறுவர். இந்தத் தர்மத்தை நமது அரசாங்கம கவனித்துக் கடமை புரிந்தால மக்கள் இன்புற்று வாழ்வார்கள்.

## ஞானசம்பந்தர் திருவிழா

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம்

18, 19, 20—5—68 சனி ஞாயிறு திங்கள்

யாழ். நல்லை. மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் எதிர் வரும் 18-5-68 முதல் 20-5-68 வரை ஷ விழா சிறப்புற நடைபெறும். தினமும் ஆதீனத்தில் முற்பகல் 0-00 மணியளவில் விசேஷ அபிஷேக ஆராதனை பூசைகளும 12-00 மணிக்கு மாகேசுர பூசையும் நடைபெறும். மாலையில் மங்கள இசை சொற்பொழிவுகள் என்பன இடம்பெறும். 18-ஆ மாலை 6-30 மணிக்கு நல்லை. கைலாச நாத சுவாமி கோவிலில் ஞானப் பால் உற்சவமும் 19-உ மாலை 6 மணிக்கு பொற் குளம் பெறும் உற்சவமும் 20-உ முத்துப் பல்லக்குப் பெறும் உற்சவமும் சிறப்புற நிகழும். 18-உ சனிக்கிழமை இரவு 8 மணியளவில் சிவ ஸ்ரீ [illegible] தேசிகரவர்களால் "தென்புகலி வேந்தன் செயல்" என்னும் பொருள்பற்றி உபந்நியாசம் செய்யப்பெறும். இரண்டாம் நாள் விழாவில் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் பிரம்மஸ்ரீ வ. குமாரசர்ம அவர்களும் [illegible] முருகன் வழிபாடு [illegible] திரு என். [illegible] வான்களது மங்கள இசையும் ஷ ஆதீன மாணவர்களது திருப்புகழ் பசனையும் இரவு 10-00 மணியளவில் சங்கீதபூஷணம் திரு. [illegible] இராஜலிங்கம் அவர்களின் [illegible] இன்னும் பல அரிய நிகழ்ச்சிகளும் [illegible] விழாவின்பொருட்டு நல்லூர் [illegible] கோலம் பூண்டுள்ளதெனலாம். [illegible]

— எமது நல்லூர் நிருபர்.

## யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை 79-வது வருடாந்தக் கூட்டம்

ஷ கூட்டம் 11-5-68 சனிக்கிழமை முற் பகல் 10½ மணியளவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிவநெறிக்காவலர் திரு த. முத்துச் சாமிப் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) "நாவலர் பெருமானுக்கு ஒரு சிலை நிறுவ வேண்டுமென 1963-ம் ஆண்டில் இச் சபை தீர்மானஞ் செய்து நிதியும் ஒரு சிறு தொகை சைவாபிமானிகளிடம் திரட்டியுள்ளது. இவ் வருடத்தில் அத் தீர்மானத்தை நிறைவேற்றக்கூடிய ஒழுங்குகளைப் புரிதல் வேண்டும்" என இச் சபை தீர்மானிக்கிறது

2) "இக் காலம் சில பத்திரிகைகள் ஆபாசமான செய்திகளைத் தடித்த எழுத்துக்களில் பிரசுரஞ் செய்வதனல் பொது மக்கள் எவர்களதும் சிறப்பாக இளைஞர்களதும ஒழுக்கம பாதிக்கப்படும். அவ்வாறான செய்திகளைப் பிரசுரஞ் செய்தலை நிறுத்தல் வேண்டும்" என இச் சபை பத்திராதிபர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(3) "சைவப் பிள்ளைகள் பெரும்பான்மையாகக் கல்வி பயிலும் வித்தியாசாலைகளைப் புது வருடத்துக்குப் பின்னர் சுப தினங்களில் தொடங்க வேண்டுமெனம், கல்விக்கூடங்கள் தொடங்கும் தேதிகளை மநிலக் கல்வியதிகாரியவர்கள் சைவத் தலைமையாசிரியர்களையும சைவஅதிபர்களையும கலந்தாலோசித்து நிர்ணயிக்கவேண்டு"மெனவும இச் சபை தீர்மானிக்கின்றது.

அடுத்தவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு

தலைவர்: திரு. த. முத்துச் சாமிப்பிள்ளை.

உப தலைவர்கள்:

முதலியார்
திரு செ. முத்துத்தம்பி
திரு சிவ உ சோமசேகரம்

காரியதரிசி:
திரு ஆ. தனபாலசிங்கம்

உபகாரியதரிசிகள்:
திரு [illegible] முதலியார்
திரு க. [illegible] பிள்ளை

தனாதிகாரி:
திரு. இ. செ. மன்மதராயன்

சமயப்பிரசார அமைச்சர்:
திரு. மு. மயில்வாகனம்

கணக்குப் பரிசோதகர்:
சச்சிதானந்தா ஷோக்மன் விஜயரத்தின அன்ட் கொம்பனி.

A பிரிவு நிர்வாகசபை அங்கத்தவர்கள்

1. இ. செ. மன்மதராயன்
2. மு. மயில்வாகனம்
3. வை. இரகுநாதமுதலியார்
4. கா. நடேசா
5. சி. சிவகுருநாதன்
6. த. சுப்பிரமணியம்
7. க. சிவராமலிங்கம்
8. திருமதி. மனேன்மணி அருணுசலம்

## பேராசிரியர் கணபதிப்பிள்ளை

— ஒரு பழைய மாணவன் —

இலங்கைப் பல்கலைக் கழக முன்னுள் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள் மறைந்து விட்டார்கள். பேராசிரியரின் அன்பும் பண்பும் ஆற்றலும் அனைவரையும் கவர்வன. தமக்கே யுரித்தான தமிழறிவும் தயாள சிந்தையும் உடையவர். நகைச்சுவை அவர் வாக்கிற் பரிமளிக்கும்; அன்பு முகத்திற் தாண்டவமிடும் அவரிடம் கற்ற மாணவர்கள் தவஞ்செய்தவர்களென்றே சொல்லவேண்டும். அத்தகையதோர் குருபத்தியைமாணவர்களிடையே விளங்கச் செய்தவர் பேராசிரியர். பலகலைக் கழகக் கல்வியை தமது தனித் தன்மையால் ஒரு குருகுலக் கல்விமுறையாக்கிய பெருமை அன்னருக்கு உண்டு.

தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கிய பேராசிரியர் கீழைத்தேச மொழிப் பிரிவின் தலைவராகவும் சில சமயம் விளங்கினர் பதில் உப வேந்தராகவும விளங்கிய பெருமை பேராசிரியருக்கு உண்டு.

தமிழ்மொழியைப் பண்பினல் பாதுகாத்த பேராசிரியர் ஒரு கவிஞர், நாடகாசிரியர், நாவலாசிரியர் சுருங்கக்கூறின் அவர் ஒரு நடமாடும் பல்கலைக் கழகம் நாடறிந்த முத்தமிழ் வித்தகர்.

தமிழர்களின் வீரத்தையும் பழம் பெரும் சங்க காலப் பண்பாட்டையும் இககாலத்திலும் நாம் காணுமாறு வாழ்ந்து காட்டிய பேராசிரியர் காலத்திற்குக் காலம் இந்துசாதனத்திலும் எழுதிவந்தார்கள்.

சிறந்த கடவுட் பக்தியுடையவர் பேராசிரியர் பத்திப்பாடல்களை யாத்துள்ளார். முருகன் அவர் வழிபடுதெய்வம் அன்னரின மறைவால தமிழ்த்தாய் கலங்குகின்ருள. நாமும கவலகின்ருேம. எங்கள் அனுதாபம் பேராசிரியரின குடும்பத்தினர்க்கு உரித்தாகுக.

## சித்திரை அன்னம்பாலிப்பு

புன்னலைக் கட்டுவன் ஆயாக் கடவைச் சித்தி விநாயகர் ஆலயத்தில் சென்ற 12-5-68 காலை 8-மணிக்கு இராஜன் மில் அதிபர் அவர்களால் சித்திரை (கஞ்சி) அன்னப்பாலிப்புசிறப்புற நிகழ்த்தப் பெற்றது.

அன்று மாலை 9 மணியளவில் மாங்கனி பெற்ற மங்கை என்னும் பொருள்பற்றி ஜெகதாசாம்பசிவக் குருக்களால் ஓர் கதாகாலக்ஷேபமும் வேண்டுவதே மனிதப்பிறவி என்னும் பொருள் பற்றி ச. சாம்பசிவக் குருக்கள் அவர்களால் உபந்நியாசமும் நிகழ்த்தப்பட்டன.

## மாணவ சமுதாயமும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பரியம், சூழ்நிலைக் கேற்ற முறையில் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்றது எனது தாழ்மையான அபிப்பிராயம். அல்லாமலும் மனனம்பண்ணும் முறையைச் சிறுவயதிலிருந்தே அப்பியாசம் பண்ணி வளர்த்து வந்தால் ஞாபக சக்தி விருத்தியாகும். உலக அநுபவத்தை ஒட்டிப் பார்க்கும் போது ஞாபகசக்தி ஸ்திரமாயுள்ளவர்கள் தான் நாக்கு வன்மையால் வாக்கு வன்மையால் தங்கள் சுய நல விருத்தியில் அல்லது பொது நல சேவையில் பிரயிக்கத் தக்க முறையில் சித்தி எய்துகிருர்கள். இவ்வித ஆற்றல்பெறுவதற்கு ஞாபக சக்தியை ஸ்திரப் படுத்த வேண்டும். மனனம பண்ணும் முறை தகுந்த அப்பியாசமாய் அமையும்.

ஆகவே மாணவ சமுதாயத்தின் ஒழுக்கக் குறைவை மேடைகளில் பிரலாபிப்பதோடு நின்று விடாமல் தற்கால இளைஞரும் வருங்கால இளைஞரும் நற்பிரசைகளாகத் திகழும் வண்ணம வேண்டிய மாற்றங்களைச் செய்ய வேண்டிய கடன் தேசாபிமானமுங் கல்வித்திறனும் படைத்த [illegible]சிரியர் மேலும் ஆசிரியர் மேலுந் தங்கியுள்ளது இவர்கள் ஒன்றுசேர்ந்து பெற்றோர் சங்கங்களுடன் ஆலோசனை செய்து மாணவ சமுதாயத்திற் சுமத்தப்படுமவசைக்கு விமோசனங் காண்பார்களாக.

ஜி. சுப்பிரமணியம்
புலவர்
பருத்தித்துறை

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டில்
கோக்குவில் வல்லிபுரம் பொன்னையா — வழக்காளி
இல M. B. 7693 — எதிராக
1. சங்கிலியன் வீதி நல்லூர் யாழ்ப்பாணம் வல்லிபுரம் இராசையா.
2. ஷெயூர் பெண் பாக்கியம் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக்ட் கோட்டின் MB. 7593-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளையின்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1968-ம் ஆ ஆனி மீ 22-ந் வ. சனிக்கிழமை முற்பகல் பதினொரு மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 41 0/00 21-9 1965 தொடக்கம் 10-3-66 வரைக்கும் ரூபாய் 000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீ. வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 3 4/55 தம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக்ட் நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை "சங்கரன் வளவு புன்னை வளவு நீக்கா குட்டிவளவு" பர. நி. இல 7 குளி 16 8 1 உதரர் பேரம் உலாந்தா T. கறையா னால் 89 இல 29-10-56-ல் தயாரிக்கப்பட்ட அளவு படத்தில் பர. நீ இல ஏழு குளி எட்டு (பர. நீ, இல 7 குளி 8) இதில் கிழக்குப்பக்கத்தில் குறித்த அளவு படத்தில் 4 ம் துண்டாகக் காட்டிருக்கும் பர. நீ இல ஒரு குளி பதினொன்றரை (பட். நீ. இல 1குளி 11 1/2) இதனுள் விடும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு நல்லூர்க்கந்தசுவாமி கோவிலுக்குரிய வாதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு தம்பியப்பா சிவபாக்கியத்திற்குரிய வாதனம் தெற்கு விஜயரெத்தினம் பெண் அன்னலெட்சுமிக்குரிய வாதனம் இதன் பதிவு D. 262/205.

காரைநகர், 1968-ம் ஆ வைகாசி மீ 7வ. — வை. ஏரம்பமூர்த்தி, கொம்மிஷனரும் ஏலவிற்பனையாளரும்.
M. 44, 17—5—)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

T.A இராசையா பிள்ளையின் கைம்பெண் எலிசபெத் முத்தம்மா - காம் பொன். — வழக்காளி
இல. MB 8110 — எதிராக
சின்னத்துரை கனகரத்தினம் - சரவண தானுகவும் காலஞ் சென்ற தனது மனைவி சிவபாக்கியத்தின் ஆதனத்தின் சட்ட பூர்வமான பிரதிநிதி - சரவண — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக்ட் கோட்டில் M. B. 8110-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1968-ம் ஆ வைகாசி மீ 30-ம் வ. வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 5026/50 சதம் 9. 4 66 தொடக்கம் 5-12-66 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 18% வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 % வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 448/80 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்றிக்ட்,தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று காரம்பொன் இறை 'ஒருகொப்புப் புளியடி' இதன் தெறபரப்பு 22 லிடு இனமும் தென்னைகளும் இதன் எல்லை கிழக்கு நாகநாத சோமசுந்தரமும் தயைபயா சோமசுந்தரத்தின் ஆதனங்கள், வடக்கு ஒழுங்கு, மேற்கு சிவசாமி பெண் காமாட்சியும் மருமகனுக்குமுரிய ஆதனங்கள் தெற்கு கந்தையா பெண் அன்னபிள்ளையின் ஆதனம் இது முழுவதும் பதிவுஇலக்கம் C 346/140—

22, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 15-4-68 — வே. கோபாலபிள்ளை, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம் 43 17—5

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னக்குட்டி வேலாயுதம் பண்ணுகம், சங்கானை மேற்கு — வழக்காளி
வழக்கு இல. M. B. 3702 — எதிராக
1. கதிரேசு சுப்பையாவும் பலர
2. செல்லமுத்து சுப்பு.... — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் MB 3702-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணியை 1968-ம் ஆ ஆனி மீ 13 வ. வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 1659/ 17 1-1960 தொடக்கம் 29-6-61 வரைக்கும் ரூபாய் 1225/-க்கு 10 வீ. வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும். கோட்டுச் செலவு கொடுபடவுள்ளது. இதல் ரூபா 1500/- கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக்ட் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் இறை 'நாகதோட்டமும் கூராதோட்டமும் சித்திரங்கதோட்டமும்' என பர. 4-ம் பங்கும் பயிர்வகைகளும் வடக்கெல்லை காணியிருந்து கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரிமையும் எல்லை கிழக்கு குருநாத கதிரவேலுவுக்குரிய காணியும் வைகையொழுங்கை மேற்கும் வடக்கு குருநாத கதிரவேலுவுக்குரிய காணி மேற்கு அருணாசலம் ஆறுமுகத்துக்குரிய காணி தெற்கு கைவொழுங்கையும் சுப்பர் வீனு சித்தம்பிக்கும் பெண் முத்துப்பிள்ளைக்குமுரிய காணியும்.

22, கோவில் வீதி, யாழ்ப்பாணம். — நீ. அன்ரனிப்பிள்ளை, கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

மலரயனுந் திருமாலுங் காணுமை மதியங்கப் புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழ புரிசடையார் குலவடகந் தருநிலவே முடிதிசைக் கோபுரவாயில் நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா ளினைபோற்றி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 17—5—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது. பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

## நாவலர் நல்வாக்கு

பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயில், பாவம் செய்பவர்களும் இலர்; ஆதலால் பாவம் செய்பவர்களினும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள். ——

## அறிவித்தல்

என்னால் 1968-ம் ஆ வைகாசி மீ 18-ம் திகதிக்கு பிரசித்த ஏலத்தில் விற்பனவிற்கு நியமிக்கப்பட்ட திருவாளர். K. பொன்னுச்சாமிக்கும் திருமதி. பொன்னுச்சாமிக்கும் சொந்தமான ஆதனங்களின் விற்பனவு பின் போடப்பட்டுள்ளது.

வை ஏரம்பமூர்த்தி
கொமிஷனர்,
Commissioner of Sales,
காரைநகர்.
10-5-68 — எம். 45 17—5—68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M. B 8803
V செல்லையா மனைவி மேரிஜனை காம்பொன் — வழக்காளி
எதிராக
ஐயம்பிள்ளை சொக்கநாதன் காம்பொன் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக்ட் கோட்டின் M. B. 8803-ம் இலக்க வழக்கின் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணியை, 1968-ம் ஆ ஜூன் (June ஆனி) மீ 12 வ. (12-6-68) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 3601-40 ம் 31-1-67 தொடக்கம் 30-9 67 வரைக்கும் ரூபா 2200 -க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 454-86.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக்ட் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று காரம்பொன் இறை "சந்தை" தெறபரப்பு 1 குளி 10-ம் வீடும் கிணறும் தென்னை மரங்களும் வேம்புகளும் எல்லை கிழக்கு தம்பிமுத்து கந்தையாவினுதனம். வடக்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளையினுதனம். மேற்கு மரியான் பெண் பொன்னம்மாவுக்கும் மருமகனுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு சின்னத்தம்பி வேலாயுதத்துக்கும் சந்திரசேகரம்பிள்ளை செல்லையாவுக்குமுரிய ஆதனங்கள்: இதடங்கலும். பதிவு எண் C 319/26.

நீ. அன்ரனிப்பிள்ளை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரு
22 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
எம். 48, 17-5

## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம் | 9-00 |
| தமிழ் | 9-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 12-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 10-50 |
| தமிழ் | 10-50 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-50 |

## சைவ விருத்திச் சங்கம்

கொட்டடி சைவ விருத்திச் சங்கத்தின் மகாசபைக் கூட்டம் கீலக வருஷ வைகாசிமீ 9-ம் திகதி (22-5-68) புதன்கிழமை பிரகல் 4 மணியளவில் விக்னேஸ்வர விநாயகராலய மண்டபத்தில் சுருக்கமாயிலிருக்கும் மடத்தில் நடைபெறும்.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன் நற்றா டொழாஅ ரெனின்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் நல்லூர் முத்துக்குமாரு வயித்திலிங்கம் கைம்பெண் செல்லம்மா — வழக்காளி.
வழக்கு. இல M B. 7418 — எதிராக
யாழ்ப்பாணம் கொழும்புத்துறை கணபதி செல்லையா — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 7418-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1968-ம் ஆண்டு ஜூன் (ஆனி) மாதம் 22 -ந் திகதி (22-6-68) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 1740-ம் இதில் ரூபா 1000 க்கு 19 5-65 திகதி தொடக்கம் 3-12-65 திகதி வரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 -க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 326-25 சதம். இதில் ரூபா 500 இறுபட்டது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற் றுகொழும்புத்துறை இறை 'டிமிருப்பு' நிலப்பரப்பு இலும் (4 ½ குளி ½ ம பனைகளும் தென்னைகளும் மற்றும் செய்பயிர்களும் வா கிணறும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளையாரின் ஆதனம் வடக்கு சின்னையா பெண் நிர்மலாதேவிக்கும் செல்லையா சாரஸ்வதிக்கும் மருமகனுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு ஒழுங்கை. தெற்கு ஆறுமுகம் செல்லத்துரைக்கும் பரமானந்தருக்கும் மருமகளுக்குமுரிய ஆதனம். இதடங்கலும்: முற் பதிவு D 266/109.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
தெல்லிப்பழை. 17-4-1968 — Commissioner & Valuer.
எம். 40. 17-5-68

## அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன், சக்கலவோடை, காரைநகரில் அடைவுபிடிக்கும் கு கந்தசாமி அவர்களின் அடைவுகடையில் 1965 -ம் ஆ தைமீ முதலாம் திகதி தொடக்கம் 1967 -ம் ஆ பங்குனி மீ 31-ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1968 -ம் ஆ ஆனி மீ 16 -ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல பத்து மணி தொடக்கம் டி அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வை ஏரம்பமூர்த்தி,
காரைநகர். 14—5—68 — Auctioneer, ஏலவிற்பனையாளர்.
எம். 46 17 24—5—68)


யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாபநிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றவரவு.

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்களுக்கு வரையறுக்க ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

Std. 14 — — மனேஜர்.